# *தரம் 6 இற்கு மாணவர்களின் நகர்ப்புறப் பாடசாலைகளின் தெரிவானது கிராமப்புறப் பாடசாலைகளின் விளைதிறனில் ஏற்படுத்தும் தாக்கம் (ஆலையடிவேம்புக் கோட்டத்திற்குட்பட்ட 1C மற்றும் வகை II பாடசாலைகளினை அடிப்படையாகக் கொண்ட அளவைநிலை ஆய்வு)*

# Impact of Grade 6 student's choice of urban schools on the effectiveness of rural Schools (Research based on 1C and Type II schools of Alayadivembu division)

Pulenthiran Hindujah

*Department of Education and childcare, Faculty of Arts and Culture, Eastern University, Sri Lanka.*
*[1]phindujah1994@gmail.com*

**ஆய்வுச்சுருக்கம்**

*மாணவர்களது நகர்ப்புறப் பாடசாலைகளின் தெரிவானது கிராமப்புறப் பாடசாலைகளின் விளைதிறனில் தாக்கத்தை ஏற்படுத்துவதாக அமைவதனை ஆராய்ந்து முடிவுகளையும் உரிய விதப்புரைகளையும் முன்வைக்கும் நோக்கில் இவ் அளவை நிலை ஆய்வானது மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாய்வானது அம்பாறை மாவட்டத்தின் ஆலையடிவேம்புக் கோட்டத்திற்குட்பட்ட கிராமப்புறப் பாடசாலைகளினை அடிப்படையாகக் கொண்டு இடம்பெறுவதனால் குறித்த பிரதேசத்திலுள்ள கிராமப்புறப் பாடசாலைகளிலிருந்து நோக்க மாதிரியினடிப்படையில் 1C வகைப் பாடசாலை ஒன்றும் வகை II பாடசாலை நான்கும் என 5பாடசாலைகள் தெரிவுசெய்யப்பட்டுள்ளன. ஆய்வுக்கான சிறப்பு நோக்கங்களாக மாணவர்கள் கனிஷ்ட இடைநிலைக்கல்வியினைத் தொடர்வதற்கு நகர்ப்புறப் பாடசாலைகளினைத் தெரிவு செய்வதற்கான காரணங்களைக் கண்டறிதல், கிராமப்புறப் பாடசாலைகளிலுள்ள குறைபாடுகளினைக் கண்டறிதல், மாணவர்கள் நகர்ப்புறப் பாடசாலைகளினைத் தெரிவு செய்வதால் கிராமப்புறப் பாடசாலைகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை இனங்காணுதல், கிராமப்புறத்தில் உள்ள பாடசாலைகளின் விளைதிறனை மேம்படுத்துவதற்குப் பொருத்தமான ஆலோசனைகளை முன்வைத்தல் போன்றன அமைகின்றன. அதிபர்கள் 5பேரும், ஆசிரியர்கள் 35பேரும், நகர்ப்புறப் பாடசாலைகளினைத் தெரிவு செய்யாத மாணவர்கள் 245பேரும் எழுமாறாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன், நகர்ப்புறப் பாடசாலைகளினைத் தெரிவு செய்த மாணவர்கள் 96பேர் மற்றும் நகர்ப்புறப் பாடசாலைகளினைத் தெரிவு செய்த மாணவர்களது பெற்றோர்கள் 96பேரும் நோக்கமாதிரியினடிப்படையில் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இம்மாதிரிகளிடமிருந்து வினாக்கொத்து, நேர்காணல், ஆவணம் ஆகிய ஆய்வுக்கருவிகளின் மூலம் பெறப்பட்ட தரவுகள் அளவு மற்றும் பண்பு ரீதியாகவும் பகுப்பாய்விற்குட்படுத்தப்பட்டு Excel ஊடாக அட்டவணையின் மூலம் குறித்துக் காட்டப்பட்டுள்ளது. கிராமப்புறப் பாடசாலையிலுள்ள மாணவர்கள் ஆங்கில மொழிமூல கல்வியினைப் பெற்றுக் கொள்வற்காகவே நகர்ப்புறப் பாடசாலைகளைத் தெரிவுசெய்கின்றனர், கிராமப்புறப் பாடசாலைகளில் ஆங்கிலம் சார்ந்த வசதிகள் இல்லை, கிராமப்புறப் பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்கள் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடையாதவர்களாகவே காணப்படுகின்றனர். போன்ற முடிவுகள் கண்டறியப்பட்டதுடன் கிராமப்புறப் பாடசாலைகளில் ஆங்கில மொழிமூலக்கல்வியினைக் கொண்டுவருவதற்கு பாடசாலை மற்றும் சமூகமும் சேர்ந்து முயற்சிக்க வேண்டும். பாடசாலையானது மாணவர்களுடன் சிறந்த உறவுகளினை வளர்த்துக்கொள்வதற்கான செயற்றிட்டங்களினை அதிபர் மேற்கொள்ள வேண்டும் போன்ற விதப்புரைகளும் முன்வைக்கப்பட்டுள்ளன.*

***திறவுச் சொற்கள்:*** *வினைத்திறனான மாணவர்கள், கிராமப்புறப் பாடசாலை, நகர்ப்புறப் பாடசாலை, விளைதிறன், தாக்கம்*

---

## *1.* அறிமுகம்

### *1.1* ஆய்வு அறிமுகம்

*இன்றைய காலகட்டத்தில் கல்வித்துறையில் காணப்படும் கிராம, நகர வேறுபாடுகள் காரணமாக வளப்பங்கீட்டில் ஏற்படும் சமமின்மையானது ஆலையடிவேம்புக் கோட்டத்திற்குட்பட்ட கிராமப்புறப் பாடசாலைகளில் சவாலாக அமைகின்ற அதே வேளையில் மறுபுறம் இப்பாடசாலைகளில் ஆரம்பக் கல்வி பயின்று கனிஷ்ட இடைநிலைக் கல்வி பயில்வதற்கான வாய்ப்புக் காணப்பட்டும் பல்வேறான காரணங்களின் நிமிர்த்தம் தரம்6இற்கு மாணவர்கள் நகர்ப்புறப் பாடசாலைகளினைத் தெரிவுசெய்வதால் இப்பாடசாலைகளின் விளைதிறனில் தாக்கமானது ஏற்படுகின்றது. தீர்மானிக்கப்பட்ட குறிக்கோளினை அடைந்துகொள்வதுடன் தொடர்புபட்ட அம்சமே விளைதிறனாகும். குறிப்பாக புலமைப்பரிசில் பரீட்சையில் வெட்டுப்புள்ளிகளிற்கு மேல் பெற்ற மாணவர்கள் மற்றும் இவர்களில் இணைப்பாடவிதானச் செயற்பாட்டுப் போட்டிகளில் முன்னிலையில் திகழும் வினைத்திறனான மாணவர்களது வெளியேற்றமானது மிகவும் பாதகமான விளைவுகளை இப்பாடசாலைகளின் விளைதிறனில் ஏற்படுத்துகின்றது.*

*குறைந்த விரயத்துடன் கிடைக்கத்தக்க வளங்களை உச்சமாகப் பயன்படுத்துவதே வினைத்திறனாகும். இத்தகைய தன்மையுள்ள மாணவர்களின் வெளியேற்றத்தினால் ஆலையடிவேம்புக் கோட்டத்திற்குட்பட்ட கிராமப்புறப் பாடசாலைகள் தமது இலக்கினை எய்துவதில் தாக்கங்களினை எதிர்கொள்கின்றன. இவ்வாய்வானது இது பற்றி ஆராய்வதனை அடிப்படையாகக் கொண்டுள்ளது.*

### *1.2* ஆய்வுப் பிரச்சினைக் கூற்று

*கனிஷ்ட இடைநிலைக்கல்வியினைத் தொடர்வதற்காக மாணவர்கள் நகர்ப்புறப் பாடசாலைகளினைத் தெரிவு செய்யும் நிலையானது கிராமப்புறப் பாடசாலைகளின் விளைதிறனை அதிகரிப்பதற்கு சவாலாக உள்ளது.*

### *1.3* பொது நோக்கம்

*கிராமப்புறப் பாடசாலையில் கல்வி கற்று புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் கனிஷ்ட இடைநிலைக் கல்வியினைத் தொடர்வதற்காக நகர்ப்புறப் பாடசாலைகளினைத் தெரிவு செய்யும் செயற்பாடானது மாணவர்கள் ஏற்கனவே கற்ற கிராமப்புறப் பாடசாலைகளின் விளைதிறனில் எத்தகைய தாக்கத்தினை ஏற்படுத்துகின்றது என்பதனை அறிதல்.*

### *1.4* சிறப்பு நோக்கங்கள்

*1. மாணவர்கள் கனிஷ்ட இடைநிலைக்கல்வியினைத் தொடர்வதற்கு நகர்ப்புறப் பாடசாலைகளினைத் தெரிவு செய்வதற்கான காரண*

*ங்களைக் கண்டறிதல்.*

*2. கிராமப்புறப் பாடசாலைகளிலுள்ள குறைபாடுகளினைக் கண்டறிதல்.*

*3. மாணவர்கள் நகர்ப்புறப் பாடசாலைகளினைத் தெரிவு செய்வதால் கிராமப்புறப் பாடசாலைகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை இனங்காணுதல்.*

*4. கிராமப்புறத்தில் உள்ள பாடசாலைகளின் விளைதிறனை மேம்படுத்துவதற்குப் பொருத்தமான ஆலோசனைகளை முன்வைத்தல்.*

### *2. இலக்கிய மீளாய்வு*

Downey,D. (2019) *ஏழை, நகர்ப்புறப் பள்ளிகளில் உள்ள குழந்தைகள் மற்றவர்களைப் போலவே கற்றுக்கொள்கின்றார்களா எனும் தலைப்பில் ஓஹியோ மாநிலத்தில் செய்த ஆய்வின் படி பின்தங்கிய மற்றும் சிறுபான்மை குழந்தைகளுக்கு சேவை செய்யும் நகர்ப்புற மாவட்டங்களில் இருப்பதை விட, புறநகர் மற்றும் பணக்கார மாவட்டங்களில் மாணவர் தேர்வு மதிப்பெண்கள் பொதுவாக அதிகமாக இருப்பதன் முடிவுகள் ஆச்சரியமாகத் தோன்றலாம். ஆனால் அந்த சோதனை மதிப்பெண்கள் பள்ளிக் கூடங்கள் எவ்வாறு செயல்படுகின்றன என்பதை விட வகுப்பறைக்கு வெளியே என்ன நடக்கிறது என்பதைப் பற்றி அதிகம் பேசுகின்றன என்றார்.*

Vishwajeet, M.C and Grish M.C. (2018) *பாடசாலைச் சுகாதார மதிப்பெண்: கிராமப்புறங்களுக்கு இடையிலான ஒப்பீட்டு பற்றி சன்ங்லி மாவட்டத்தில் செய்த ஆய்வில் கிராமப்புறப் பாடசாலைகளை விட நகர்ப்புறப் பாடசாலைகள் கணிசமாகச் சிறந்தது எனக் குறிப்பிட்டுள்ளார். நகர்ப்புறப் பாடசாலை மாணவர்களில் 57% பேர் பணக்கார குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் மற்றும் 30% ஏழை மற்றும் 13% மிகவும் எழைக் குடும்பங்களிலிருந்து வருகின்றனர் எனவும் குறிப்பிட்டுள்ளார்.*

*செல்வராஜா.மா (2016) விளைதிறன் பாடசாலை எனும் தலைப்பில் எழுதிய கட்டுரையில் கல்வி அமைப்பினுள் காணப்படும் ஒவ்வொரு பாடசாலையும் விளைதிறன் பாடசாலையாக கட்டியெழுப்புவதிலேயே ஒவ்வொரு நாட்டினதும் கல்வி முகாமைத்துவச் செயற்பாடு கவனம் செலுத்துகின்றது. ஒரு பாடசாலை தனது நோக்கங்கள்- குறிக்கோள்களை எதிர்பார்த்த அளவில் அடைந்தால் மாத்திரமே அதை விளைதிறன் பாடசாலையாகக் கொள்ள முடியும். தேசிய கல்வி நோக்கங்கள் ஒரு நாட்டிற்குள் பொதுவாக இருக்கும். அந்த நோக்கங்களுக்கு இயைபான வகையில் பாடசாலை தனக்குரிய நோக்கங்கள், குறிக்கோள்களை அமைத்துக்கொண்டு அவற்றை அடைய முயற்சிகளை மேற்கொண்டு வெற்றி பெறுமாயின் அதனை விளைதிறன் பாடசாலை என அழைக்கலாம்.*

Achuoneye, K.A. (2012) *என்பவர் நைஜீரியாவில் நகர்ப்புற மற்றும் கிராமப்புற தொடக்கப் பள்ளிகளில் கணினி கல்வியறிவைப் பாதிக்கும் காரணிகளை ஒப்பிட்டளவில் ஆராய்ந்த போது நகர்ப்புறங்களிலிருந்து பதிலளித்தவர்களில் 67% ஆனவர்கள் நகர்ப்புறப் பாடசாலைகளில் கணனிகள் இருப்பதாக ஒத்துக்கொண்டனர். நகர்ப்புறப் பாடசாலையினைச் சேர்ந்த 56% ஆன ஆசிரியர்கள் கணனி திறன்களைக் கொண்டிருப்பதாக உறுதிப்படுத்தினார்.*

Winston, Roger,B *மற்றும் குழுவினர். (2008) மேற்கொண்ட ஆய்வின் முடிவின் படி இணைப்பாடவிதானச் செயற்பாடுகள் கவர்ச்சிகரமாக இடம்பெறுவதற்கும் இதில் மாணவர்களின் ஆர்வத்தை தூண்டுவதற்கும் இணைப்பாடவிதான உட்கட்டமைப்பு வசதிகள் சிறப்பாக அமைதல் வேண்டும். அந்த வகையில் கிராமப்புறப் பாடசாலைகள் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளுக்கான வளங்களைப் பெற்றுக்கொள்வதுடன் அங்கு காணப்படும் வளங்களைச் சிறப்பாகப் பராமரித்தலும் அவசியமாகும்.*

### *3. ஆய்வு முறையியலும் வடிவமைப்பும்*

*தரம்6இற்கு நகர்ப்புறப் பாடசாலைகளினைத் தெரிவு செய்த மாணவர்கள் ஏற்கனவே கல்வி கற்ற கிராமப்புறப் பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்படுகின்றது. இதனடிப்படையில் இவ்வாய்வு முறையியல் எனும் விடயத்தினுள் ஆய்வுத் தலைப்பிற்குப் பொருந்தும் வகையில் அளவை நிலை ஆய்வு முறை பயன்படுத்தப்பட்டுள்ளது.*

*இவ்வாய்வில் எண் ரீதியான முறைமையியலும், பண்பு ரீதியாக முறைமையியலும் கலந்த கலப்பு முறைமையியல் பயன்படுத்தப்பட்டுள்ளது. Microsfot Excel 2016இனைப் பயன்படுத்தி அட்டவணைகள், புள்ளி விபரங்கள், உருக்கள் போன்றன தயாரிக்கப்பட்டுள்ளன. இதில் மாதிரியாகத் தெரிவு செய்யப்பட்ட அதிபர்கள், ஆசிரியர்கள், நகர்ப்புறப் பாடசாலைகளினைத் தெரிவு செய்த மாணவர்களது பெற்றோர், நகர்ப்புறப் பாடசாலைகளினைத் தெரிவு செய்த மாணவர்கள், நகர்ப்புறப் பாடசாலையிலைகளினைத் தெரிவுசெய்யாத மாணவர்கள் போன்றோருடனான வினாக்கொத்து, நேர்காணல் மூலமாகப் பெறப்பட்ட தரவுகள், பகுப்பாய்வு செய்யப்பட்டு பின்னர் ஆய்வு நோக்கங்களிற்கிணங்க பெறப்பட்ட முடிவுகள் அனைத்தும் பொதுமையாக்கம் செய்யப்பட்டது.*

#### *3.1 குடித் தொகையும் மாதிரித் தெரிவும்.*

*நோக்க மாதிரித் தெரிவின் அடிப்படையில் 05 பாடசாலைகள் மாதிரியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளன. தரம்6இற்கு மாணவர்களது நகர்ப்புறப் பாடசாலைத் தெரிவால் கிராமப்புறப் பாடசாலையின் விளைதிறனில் ஏற்படும் தாக்கத்தை அறியும் நோக்கில் நோக்க மாதிரியின் உபயோகத்தினால் கிராமப்புறப் பாடசாலைகளில் உள்ள அதிபர்கள், தரம்06 இற்கு நகர்ப்புறப் பாடசாலைகளினைத் தெரிவு செய்த மாணவர்களது பெற்றோர்கள், நகர்ப்புறப் பாடசாலைகளினைத் தெரிவு செய்த மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன், கிராமப்புறப் பாடசாலையிலுள்ள ஆசிரியர்கள், நகர்ப்புறப் பாடசாலைகளினைத் தெரிவு செய்யாத மாணவர்கள் ஆகியோர் இலகு எழுமாற்று மாதிரியின் மூலமாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். ஆய்வு மாதிரிகளாகத் தெரிவு செய்யப்பட்ட இவ் 05 பாடசாலைகளும் நோக்கமாதிரியினை அடிப்படையாகக் கொண்டு தெரிவு செய்யப்பட்டுள்ளது. ஆலையடிவேம்புப் பிரதேசத்தில் உள்ளடங்கும் பாடசாலைகளில் 1C பாடசாலைகள் இரண்டிலிருந்து ஒன்றும், வகை II பாடசாலைகளாகவுள்ள 05 பாடசாலைகளில் இருந்து 04 பாடசாலைகளும் நோக்க மாதிரியினடிப்படையில் மாதிரிகளாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.*


*ஆய்வுக்காக 2017, 2018, 2019, 2020, 2021 ஆகிய வருடங்களில் நகர்ப்புறப் பாடசாலைகளிற்கு மாறிய 2மாணவர்களுக்கு ஒருவர் (2:1) என்ற அடிப்படையில் 96 மாணவர்கள் மாதிரியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். ஆய்வுக்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ள 5வருடங்களில் நகர்ப்புறப் பாடசாலைகளினைத் தெரிவு செய்த வினைத்திறனான மாணவர்களது பெற்றோரின் தொகையும் 192 ஆகும். இவர்களில் 6பெற்றோருக்கு ஒருவர் எனும் அடிப்படையில் 32 பெற்றோர் மாதிரியாகத்; தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.*

*நகர்ப்புறப் பாடசாலையினைத் தெரிவு செய்யாது கிராமப்புறப் பாடசாலையிலேயே இடைநிலைக் கல்வி கற்கும் மாணவர்களது மொத்த எண்ணிக்கை 2108 ஆகும். இவர்களுள் தரம் 6-11 வரையான வகுப்புக்களில் கல்வி கற்கும் மாணவர்களது மொத்த எண்ணிக்கை 980 ஆகும். இவர்களில் 245 மாணவர்கள் 4பேருக்கு ஒருவர் எனும் (4:1) விகித அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். ஆய்வுக்காகத் தெரிவுசெய்யப்பட்டுள்ள 05பாடசாலைகளிலும் மொத்தமாக 148 ஆசிரியர்கள் கற்பிக்கின்றனர். இவர்களுள் தரம்6-11இற்கு 105 ஆசிரியர்கள் கற்பிக்கின்றனர். இவர்களுள் 3பேருக்கு ஒருவர் என்ற அடிப்படையில் தரம்6-11இற்குக் கற்பிக்கும் 35 ஆசிரியர்கள் மாதிரிகளாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். ஆய்வுக்காகத் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் உள்ள மொத்த அதிபர்களின் தொகை 05 ஆகும் இவர்கள் 05பேரும் மாதிரிகளாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.*

## *4. முடிவுகள்*

### *4.1 நகர்ப்புறப் பாடசாலைத் தெரிவு*

*உங்களது பாடசாலையிலிருந்து தரம்6இற்கு மாணவர்கள் நகர்ப்புறப் பாடசாலைகளினைத் தெரிவுசெய்கின்றனரா? என்ற வினா அதிபர்களிடமும் ஆசிரியர்களிடமும் வினாக்கொத்தின் மூலமாகக் கேட்கப்பட்டதுடன் நகர்ப்புறப் பாடசாலைகளினைத் தெரிவு செய்த மாணவர்களிடம் நீங்களா இடைநிலைக் கல்விக்காக நகர்ப்புறப் பாடசாலைகளினைத் தெரிவு செய்தது என் வினாக்கேட்கப்பட்டது. இதற்கு அவர்கள் அளித்த தெரிவுகள் பின்வரும் உருவில் காட்டப்பட்டுள்ளது.*




**உரு 4.1 நகர்ப்புறப் பாடசாலைத் தெரிவு தொடர்பான தெரிவுகள்.**


*உரு 4.1இல் காட்டப்பட்டுள்ள பதில்களின் படி அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் அனைவரும் ஒரே மாதிரியான பதிலினை அளித்திருக்கின்றனர். இவர்களில் அனைவரும் ஆம் எனும் பதிலினையே தெரிவுசெய்துள்ளனர். இது 100% ஆகும். நகர்ப்புறப் பாடசாலைகளினைத் தெரிவு செய்த மாணவர்களில் ஆம் என்பதே பெரும்பான்மையானோரின் பதிலாக அமைகின்றது. இது 88.54%*


ISBN: 978-624-5736-55-3

*ஆகும். இதன் படி கிராமப்புறப் பாடசாலையிலுள்ள மாணவர்கள் தரம்6இற்கு நகர்ப்புறப் பாடசாலைகளினைத் தெரிவு செய்கின்றதனை அறியலாம்.*

### *4.2 தரம் 6 இற்கு மாணவர்கள் நகர்ப்புறப் பாடசாலைகளினைத் தெரிவு செய்வதற்கான காரணங்கள்*

*தரம் 6 இற்கு மாணவர்கள் இடைநிலைக் கல்விக்கு நகர்ப்புறப் பாடசாலையினைத் தெரிவுசெய்ததற்கான காரணங்களினைக் கூறினார்களா? என்ற வினாவானது அதிபர், ஆசிரியர்கள் ஆகியோரிடம் கேட்கப்பட்டதுடன் வினாக்கொத்தின் மூலமாக நகர்ப்புறப் பாடசாலைகளினைத் தெரிவுசெய்த மாணவர்களிடம் நீங்கள் தரம்6இற்கு நகர்ப்புறப் பாடசாலைகளினைத் தெரிவு செய்ததற்கான காரணங்களினைப் ஏற்கனவே கல்வி கற்ற பாடசாலையில் கூறினார்களா? என்ற வினா கேட்கப்பட்டது. இதற்கு அவர்கள் வழங்கிய தெரிவுகள் பின்வரும் உருவில் காட்டப்பட்டுள்ளது.*




**உரு 4.2 நகர்ப்புறப் பாடசாலைகளினைத் தெரிவு செய்ததற்கான காரணங்களினை கூறினரா என்பது தொடர்பான தெரிவுகள்.**

*உரு 4.2இல் காட்டப்பட்டுள்ள பதில்களினடிப்படையில் அதிபர்களில் 100% ஆனோர் ஆம் எனும் தெரிவினையே தெரிவுசெய்துள்ளனர். ஆசிரியர்களில் 85.71% ஆனோர் ஆம் எனும் தெரிவினையே தெரிவுசெய்துள்ளனர். பாடசாலைகளினைத் தெரிவு செய்த மாணவர்களில் 97.92% ஆனோர் ஆம் எனத் தெரிவு செய்துள்ளனர். இதனைத் தொடர்ந்து ஆம் எனப் பதிலளித்தவர்களிடம் ஆம் எனில் அவர்களால் கூறப்பட்ட காரணங்களினைக் குறிப்பிடுக எனும் வினாவானது வினாக்கொத்தின் மூலமாக அதிபர்கள், ஆசிரியர்களிடம் கேட்கப்பட்டதுடன் நகர்ப்புறப் பாடசாலைகளினைத் தெரிவுசெய்த மாணவர்களிடம் நீங்கள் நகர்ப்புறப் பாடசாலைகளினைத் தெரிவு செய்ததற்கான காரணங்களினைக் குறிப்பிடுக. எனும் வினாவானது கேட்கப்பட்டதுடன் அவர்களில் 100% ஆனோர் ஆங்கில மொழி மூலக் கல்வி பெறல் என்பதனையே குறிப்பிட்டுள்ளனர்.*

### *4.3. வசதிகள்*

*வசதிகள் தொடர்பான தரவுகளினைப் பெற்றுக்கொள்வதற்காக அதிபர்கள், ஆசிரியர்கள், ஆகியோரிடம் உங்களுடைய பாடசாலையில் பின்வரும் வசதிகள் காணப்படுகின்றதா என்பதனைத் தெரிவு செய்க. எனும் வினாவும் நகர்ப்புறப் பாடசாலைகளினைத் தெரிவு செய்த மாணவர்களிடம் நீங்கள் ஏற்கனவே கல்வி கற்ற பாடசாலையில் பின்வரும் வசதிகள் காணப்பட்டதா என்பதனைத் தெரிவுசெய்க எனும் வினாவும் கேட்கப்பட்டது. அதற்கு அவர்கள் வழங்கிய தெரிவுகளும் பதில்களும் பின்வருமாறு காட்டப்பட்டுள்ளது.*


ISBN: 978-624-5736-55-3

**அட்டவணை 4.1: கிராமப்புறப் பாடசாலையிலுள்ள வசதிகள் தொடர்பான அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களது தெரிவுகள்.**

| வசதிகள் | அதிபர்கள் 5இற்கு | | | | ஆசிரியர்கள் 35இற்கு | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | மிக திருப்தி | திருப்தி | ஓரளவு | இல்லை | மிக திருப்தி | திருப்தி | ஓரளவு | இல்லை |
| ஆங்கில மொழி மூலக் கற்கை | 00% | 00% | 00% | 100% | 00% | 00% | 00% | 100% |
| மின்சாரம் | 00% | 40% | 60% | 00% | 00% | 54.29% | 34.29% | 11.43% |
| குடிநீர் | 00% | 20% | 40% | 40% | 00% | 54.29% | 34.29% | 11.43% |
| விரும்பிய பாடங்களைக் கற்பதற்கான வாய்ப்பு | 00% | 00% | 20% | 80% | 00% | 00% | 31.43% | 68.57% |

மூலம் - ஆய்வாளனால் தயாரிக்கப்பட்டது.

*மாதிரியாகத் தெரிவு செய்யப்பட்ட அதிபர்கள், ஆசிரியர்கள், நகர்ப்புறப் பாடசாலைகளினைத் தெரிவு செய்யாத மாணவர்கள், நகர்ப்புறப் பாடசாலைகளினைத் தெரிவு செய்த மாணவர்கள் 100% ஆனோர் கிராமப்புறப் பாடசாலையில் ஆங்கிலமொழி மூலக் கற்கையினைப் பெறுவதற்கான வசதி இல்லை எனக் குறிப்பிட்டுள்ளனர். இதனைத் தொடர்ந்து விரும்பிய பாடங்களைக் கற்பதற்கான வாய்ப்பு இல்லை எனில், அத்தகைய பாடங்களினைக் குறிப்பிடுக எனும் வினாவானது நகர்ப்புறப் பாடசாலைகளினைத் தெரிவுசெய்யாத மாணவர்கள் மற்றும் நகர்ப்புறப் பாடசாலைகளினைத் தெரிவு செய்த மாணவர்களிடம் வினாக்கொத்தின் மூலமாக வழங்கப்பட்டது. இவர்களில் 100% ஆனோர் ஆங்கில இலக்கிய நயப்பாடத்தினைக் கற்பற்கான வாய்ப்பு இல்லை எனக் குறிப்பிட்டுள்ளனர்.*

### *4.4 அடைவுமட்ட விருத்தியில் ஏற்படும் சவால்கள்.*

*தரம்6இற்கு மாணவர்கள் நகர்ப்புறப் பாடசாலைகளினைத் தெரிவு செய்வதால் கிராமப்புறப் பாடசாலையின் அடைவுமட்ட விருத்தியில் சவால்கள் ஏற்படுகின்றதாயின் அவ்வாறான சவால்களினைக் குறிப்பிடுக எனும் வினாவானது அதிபர்களிடம் நேர்காணலின் மூலமாகவும் அடைவுமட்ட விருத்தியில் சவாலானது ஏற்படுகின்றதா எனும் வினாவிற்கு ஆம் எனத் தெரிவுசெய்த ஆசிரியர்களிற்கு ஆம் எனில் அடைவுமட்ட விருத்தியில் ஏற்படும் சவால்கள் 3இனைக் குறிப்பிடுக எனும் வினாவானது வினாக்கொத்து மூலமாகவும் வழங்கப்பட்டன. இதற்கு அவர்கள் வழங்கிய பதில்கள் பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.*

**அட்டவணை 4.2 அடைவுமட்ட விருத்தியில் ஏற்படும் சவால்கள் பற்றிய அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களது பதில்கள்.**

| பதில்கள் | அதிபர்கள்5 இற்கு | சதவீதம் | ஆசிரியர்கள் 35இற்கு | சதவீதம் |
|---|---|---|---|---|
| தேசிய மட்டப்பரீட்சையில் (க.பொ.த சா/த) உயர்சித்தி வீழ்ச்சி | 05 | 100% | 34 | 97.14% |
| வலயமட்டத்தில் அடைவுமட்டத்தில் கிராமப்புறப் பாடசாலையான எமது பாடசாலை பின்தள்ளப்படுதல். | 03 | 60% | 32 | 91.43% |
| க.பொ.த சா/த பரீட்சையில் ஆங்கிலபாட அடைவு மட்டத்தில் வீழ்ச்சி | 00 | 00% | 17 | 48.57% |
| க.பொ.த சா/த பரீட்சையில் கணிதபாட அடைவு மட்டத்தில் வீழ்ச்சி | 00 | 00% | 12 | 34.29% |

*அட்டவணை 4.2இல் காட்டப்பட்டுள்ள பதில்களின் படி மாதிரியாகத் தெரிவுசெய்யப்பட்ட அதிபர்களில் மற்றும் ஆசிரியர்களில் பெரும்பான்மையானோர் தேசிய மட்டப்பரீட்சையில் (க.பொ.த சா௦த) உயர்சித்தி வீழ்ச்சி என்பதனைத் தெரிவுசெய்துள்ளனர். இது முறையே 100% மற்றும் 97.14% ஆகும். இதனடிப்படையில் தரம் 6 இற்கு மாணவர்கள் நகர்ப்புறப் பாடசாலைகளினைத் தெரிவுசெய்வதால் கிராமப்புறப் பாடசாலைகள் தேசிய மட்டப்பரீட்சையில் (க.பொ.த சா/த) உயர்சித்தி பெறுவதில் வீழ்ச்சியானது ஏற்பட்டுள்ளது என்பதனைக் கண்டறியலாம்.*

*அதிபர்பள் மற்றும் ஆசிரியர்களிடம் தேசிய மட்டப்பரீட்சையில் (க.பொ.த சா௦த) உயர்சித்தி வீழ்ச்சி ஏற்படுகின்றதாயின் அதனால் உங்களது பாடசாலை எதிர்நோக்கும் பிரச்சினைகளினைக் குறிப்பிடுக எனும் வினாவானது கேட்கப்பட்ட போது அதற்குப் பெரும்பான்மையானோர் 80% ஆனோர் பாடசாலையின் நற்பெயரானது சமூகத்தில் குறைவதாகவும், 60% ஆனோர் பாடசாலையில் மாணவரது வருகையானது குறைவடைவதாகக் குறிப்பிடுகின்றனர். இதனால் மாணவர்களது வருகை குறைவடைவதனை இனங்காணலாம்.*

***4.5 மாணவர்களின் விருப்பத் தெரிவு***

*கிராமப்புறப் பாடசாலைகளின் விளைதிறனை மேம்படுத்துவதற்கு மாணவர்களின் விருப்பத் தெரிவு தொடர்பான தரவுகளினைப் பெற்றுக்கொள்வதற்காக அதிபர்கள், ஆசிரியர்களிடம் உங்களுடைய பாடசாலையின் விளைதிறனை மேம்படுத்தவதற்கு மாணவர்களின் தொடர்ச்சியான விருப்பத்தெரிவாக உங்களது பாடசாலையானது காணப்பட வேண்டுமென நினைக்கின்றீர்களா? எனும் வினாவானது வினாக்கொத்தின் வாயிலாக வழங்கப்பட்ட போது அவர்களது தெரிவுகள் பின்வரும் உருவின் மூலமாகக் காட்டப்பட்டுள்ளது.*




**உரு 4.3 பாடசாலை மீதான பெற்றோரின் விருப்பத் தெரிவானது தொடர்ச்சியாகக் காணப்பட வேண்டுமா என்பது தொடர்பான அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களது தெரிவுகள்.**

*மாதிரியாகத் தெரிவுசெய்யப்பட்ட அதிபர்கள், ஆசிரியர்கள் ஆகியோரில் 100% ஆம் எனும் தெரிவினையே தெரிவுசெய்துள்ளனர். தெரிவுகளினடிப்படையில் பாடசாலையின் விளைதிறனை மேம்படுத்தவதற்கு மாணவர்களின் தொடர்ச்சியான விருப்பத்தெரிவாக பாடசாலையானது காணப்படவேண்டும் என்பதனை அறியலாம். ஆம் எனப் பதிலளித்த அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களிடம் ஆம் எனில் இதற்காக நீங்கள் மேற்கொள்ள விரும்பும் செயற்பாடுகள் 3இனைக் குறிப்பிடுக. எனும் வினாவும் வழங்கப்பட்டது. மாதிரியாகத் தெரிவுசெய்யப்பட்ட அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களில் 100% ஆனோர் எதிர்காலத்தில் ஆங்கில மொழிமூலக் கற்கை நெறிகளை ஆரம்பிப்பதற்கு விரும்புவதாகக் குறிப்பிட்டுள்ளனர்.*

The Proceedings of 9th International Symposium, FIA, SEUSL -2022
ISBN: 978-624-5736-55-3

*பிள்ளைகளது கனிஷ்ட இடைநிலைக் கல்வி தொடர்பாக நீங்கள் வழங்கும் ஆலோசனை யாது? ஏன்ற வினாவானது பெற்றோரிடம் நேர்காணலின் மூலமாகக் கேட்கப்பட்ட போது 90% ஆனோர் பிள்ளையின் கல்வி தொடர்பாக அவர்களது விருப்பங்களினை அறிந்து அதற்கேற்ப செயற்பட வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளனர்.*

***5. தீர்வுகளும் ஆலோசனையும்***

***5.1 நகர்ப்புறப் பாடசாலைத் தெரிவு.***

*கிராமப்புறப் பாடசாலைகளிலுள்ள புலமைப்பரிசில் பரீட்சையில் வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்ற மாணவர்கள் தரம்6இற்கு நகர்ப்புறப் பாடசாலைகளினைத் தெரிவுசெய்கின்றனர், மாணவர்களது கல்வி தொடர்பாக இறுதி முடிவெடுக்கும் அதிகாரம் பெரும்பாலும் மாணவர்களிடமே காணப்படுகின்றது எனும் முடிவுகள் கண்டறியப்பட்டது. இதற்காக மாணவர்கள் தரம்6 இற்கு நகர்ப்புறப் பாடசாலைகளினைத் தெரிவு செய்வதற்கான காரணங்களினைக் கண்டறிந்து தமது பாடசாலையில் ஏற்படுத்துவதற்கு அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் முயற்சிக்க வேண்டும், பிள்ளைகள் கல்வி தொடர்பான முடிவுகளினை எடுக்கும் போது அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களுடன் கலந்தாலோசித்து பொருத்தமான முடிவுகளினை எடுக்க வேண்டும்.*

***5.2 தரம் 6 இற்கு மாணவர்கள் நகர்ப்புறப் பாடசாலைகளினைத் தெரிவுசெய்வதற்கான காரணங்கள்.***

*மாணவர்கள்நகர்ப்புறப் பாடசாலைகளினைத் தெரிவுசெய்வதற்கான உரிய காரணங்களினை அதிபர்கள், ஆசிரியர்களிடம் மாணவர்களிடம் கூறியிருக்கின்றனர், புலமைப்பரிசில் பரீட்சையில் வெட்டுப்புள்ளிகளிற்கு மேல் பெற்ற 100மூ ஆனோர் ஆங்கில மொழிமூலக் கல்வியினைப் பெற்றுக்கொள்வதற்காக நகர்ப்புறப் பாடசாலைகளினைத் தெரிவு செய்துள்ளனர் எனும் முடிவுகள் கண்டறியப்பட்டது. இதற்காக நகர்ப்புறப் பாடசாலைகளினைத் தெரிவு செய்த மாணவரால் பாடசாலை மாற்றப்படுவதற்காகக் கூறப்படும் காரணங்களின் நியாயத்தன்மையினை கிராமப்புறப் பாடசாலை அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் விளங்கிக்கொள்ள வேண்டும், கிராமப்புறப் பாடசாலைகளில் ஆங்கில மொழிமூலக்கல்வியினைக் கொண்டுவருவதற்கு பாடசாலை மற்றும் சமூகமும் சேர்ந்து முயற்சிக்க வேண்டும்.*

***5.3 வசதிகள்***

*ஆய்வின் முடிவாக கிராமப்புறப் பாடசாலைகளில் ஆங்கிலமொழிமூலக் கல்வியினைப் பெறுவதற்கான வசதி 100% இல்லை, கிராமப்புறப் பாடசாலைகளில் ஆங்கில இலக்கிய நயப்பாடத்தினைக் கற்பதற்கான வாய்ப்பு 100% இல்லை எனக் கண்டறியப்பட்டதுடன் இதற்காக கிராமப்புறப் பாடசாலைகளிலும் சகல வசதிவாய்ப்புக்களும் ஏற்படுத்தப்படுத்துவதற்கு அரசானது துணைபுரிய வேண்டும், சமூகஉறுப்பினர்கள், கிராமப்புறப் பாடசாலை சார்ந்த அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு ஆங்கில இலக்கிய நயப்பாடத்தின் முக்கியத்துவத்தினை உணர்த்தி அப்பாடத்தினைப் பாடசாலையில் அறிமுகப்படுத்த ஆலோசனை வழங்க வேண்டும். அத்துடன் கிராமப்புறப் பாடசாலைகளில் உரிய வசதி கிடைக்கும் வரை காத்திருக்காமல் சமூகத்திலுள்ள வளவாளர்களினைப் பயன்படுத்தி கற்பித்தல் செயற்பாட்டை மேற்கொள்ள வேண்டும்.*


ISBN: 978-624-5736-55-3

### *5.4 அடைவுமட்ட விருத்தியில் ஏற்படும் சவால்கள்*

*தரம்6இற்கு மாணவர்கள் நகர்ப்புறப் பாடசாலைகளினைத் தெரிவுசெய்வதால் கிராமப்புறப் பாடசாலைகள் தேசிய மட்டப்பரீட்சையில் (க.பொ.த சா/த) உயர்சித்தி பெறுவதில் வீழ்ச்சியானது ஏற்பட்டுள்ளது என்பதனைக் கண்டறியலாம். இதனால் 80% பாடசாலையின் நற்பெயரானது சமூகத்தில் குறைவடைகின்றது. அத்துடன் உயர்சித்தி வீழ்ச்சியால் சமூகத்தின் நம்பிக்கையினைப் பாடசாலை இழக்கும் நிலையானது ஏற்படுவதுடன் மாணவர்களது வருகையானது குறைவடையும் நிலையும் ஏற்படுகின்றது என்பதனை இனங்காணலாம். இதற்காக அதிபர் பாடசாலையின் கல்விச் விருத்திச் செயற்பாடுகளில் ஈடுபடுவதுடன் குறித்த சமூகத்தைச் சார்ந்த வளவாளர்களின் பங்களிப்பினையும் பெற்றுக்கொள்வதுடன் பாடசாலையின் செயற்பாடுகளில் சமூகப்பங்களிப்பினை மேம்படுத்த வேண்டும், கிராமப்புறப் பாடசாலை அதிபர் தமது பாடசாலையின் உயர்சித்தியினை ஏற்படுத்துவதற்கு தனித்துவமான செயற்றிட்டங்களினை மேற்கொள்ள வேண்டும்.*

### *5.5 மாணவர்களின் விருப்பத் தெரிவு*

*கிராமப்புறப் பாடசாலைகள் மாணவர்களின் தொடச்சியான விருப்பத் தெரிவாக அமைவதற்கு ஆங்கில மொழிமூலமான கற்கை நெறிகள் ஆரம்பிக்கப்பட வேண்டும், கல்வித்துறையினைப் பொறுத்த வரையில் மாணவர்களது விருப்பத்திற்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும். பாடசாலையின் விளைதிறன் மேம்பாட்டில் மாணவர்கள் செல்வாக்கச் செலுத்துகின்றனர் எனும் முடிவுகள் கண்டறியப்பட்டது. இதற்காக தமது பாடசாலையில் ஆங்கில மொழிமூலக் கற்கையினை ஆரம்பிப்பதற்காக பாடசாலையின் தரத்தினை உயர்த்துவதற்கான நடவடிக்கைகளில் அதிபர்கள் சமூகத்துடன் இணைந்து ஈடுபட வேண்டும், பாடசாலையானது மாணவர்களுடன் சிறந்த உறவுகளினை வளர்த்துக்கொள்வதற்கான செயற்றிட்டங்களினை அதிபர் மேற்கொள்ள வேண்டும்.*

### *6. உசாத்துணைகள்*

*செல்வராஜா, மா. 2016. பாடசாலை முகாமைத்துவம், எவகிறீன் அச்சகம், மட்டக்களப்பு.*

Aap scheerens. 2004. The meaning of the school effectiveness, Melhorar os processos e os resultados escolares, Oporto, Portugal.

Achuone ,K.A. 2012.A Comparative Study of Computer Literacy in Urban and Rural Primary School In Rivers State of Nigeria, DOI:10.5296/jsr.v3i2.2893

Arnold,M.L, Newman,J.H.,et.al .2005.A Look at the condition of rural education, journal of research in rural education,v20n6p1-25

Bany,Feuk et.al.1986.Teaching in secondary school,New York,Holt,Rinehart and Winston.

Brown,G.W, Harris.T.1986. Social Origins of Depression,Tavistock, London.

Downey, D.2019. Kids in poor, urban school learn just as much as others-School don’t are inequality. State university. Ohio

Winston, Roger.B, et al.2008.promoting student development:through intentionally structured groups,sanfrancisco,jossey-bass


ISBN: 978-624-5736-55-3